திரு. ஆர். அண்ணாநம்பி : பேரவைத் தலைவரவர்களே. வட கோவை மேம்பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளது. இது எப்பொழுது தொடங்கப்படும் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, வட கோவை மேம்பாலம் கட்டக் கூடிய திட்டம் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சுமார் பத்து கோடி ரூபாய் செலவில் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே அந்தப் பாலம் கட்டக் கூடிய இடத்தில் காட்டிலாக்காவிற்குச் சொந்தமான நிலம் தேவைப்படுகின்ற காரணத்தினாலே, கொஞ்ச நாள் தாமதப்பட்டு, தற்போது அந்தத் துறையினுடைய மாண்புமிகு அமைச்சரவர்களும் அந்த இடத்தை நேரடியாக இரண்டு மாதங்களுக்கு முன்னாலே வந்து பார்வையிட்டு, வழங்குவதற்கான உத்தரவைப் பிறப்பித்திருக்கின்றார்கள். மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, மத்திய அரசினுடைய ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் கிடைத்தவுடன் அந்தப் பணிகள் விரைவாகத் தொடங்கப்படும்.

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக பணிமனைக் கட்டிடம்.

176—(*வினா எண் 976)—திரு. ஏ. ஜி. சம்பத் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம், திருக்கோவிலூரில் உள்ள தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக நிறுவனத்துற்கென பணிமனைக் கட்டிடம் நிறுவப்படாததற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம் திருக்கோவிலூரில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திற்கென கிளை பணிமனை ஒன்று ஏற்கனவே நிறுவப்பட்டு 1—7—1985 முதல் இயங்கி வருகிறது.

இதைத் தவிர தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திற்கென சொந்தமாக பணிமனை நிறுவுவதற்காக அருள்மிகு வீரடேஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான நிலம் திருக்கோயிலூர் வட்டம் மணம்பூண்டி கிராமத்தில் ஏற்கனவே தேர்வு செய்யப்பட்டு மேற்படி நிலத்தை நேரடி விலைக்கு வாங்குவதற்கான முயற்சி நடைபெற்று வருகிறது. நிலம் கிடைத்தவுடன் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற பணிமனைக் கட்டடம் கட்டுகிற போது அந்தப் பணிமனைக்காக கொடுக்கப்பட்டிருக்கிற சிமென்ட், ஜல்லி, கம்பிகள் அந்தத் துறையில் பணியாற்றுகிற

1989 மே 2]

மானேஜிங் டைரக்டர், மானேஜர் ஆகியவர்களுடைய வீடு களுக்குப் பயன் படுத்துவது என்று அமைச்சர் அவர்களுக்கு ஏதாவது புகார் வந்திருக்கிறதா ? அதன் மீது என்ன நட வடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார்கள் எதுவும் குறிப்பாக என் னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அப்படிப்பட்ட புகார் ஏதாவது தெரியு மானால், தனிப்பட்ட முறையில் சொன்னால் கூட கடுமையான நடவடிக்கையை மேற்கொள்வோம்.

திரு. அ. லே. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டை வட்டத்தைப் பொறுத்தவரையில் அந்தப் பகுதியில் இன்னும் போதுமான பஸ் போக்கு வரத்து ஏற்படுத்தாத சூழ்நிலை இருக்கிறது. திருக்கோவி லூரைப் போன்று அங்கே கிளை பணி மனை ஒன்றை ஏற்படுத்த முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கிளை பணி மனைத் தொடங்குவதைப் பொறுத்த வரையில் ஆராய்ந்து தான் சொல்ல வேண்டும். ஆனால் தேவையான போக்குவரத்து வசதிகள் எந்தெந்த கிராமத்திற்கு வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக் கிறார்களோ, அவைகளையெல்லாம் சர்வே செய்து உடனடியாக பேருந்து விடுவதற்கான ஏற்பாடுகளை போக்கு வரத்துக் கழகங்கள் மூலம் செய்வோம்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரதது் கழகத்திற்கு பழனியில் ஒரு இடம் இருந்தது..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தென்னாற்காடு மாவட் டம் திருக்கோவிலூருக்குப் பக்கத்திலா பழனி இருக்கிறது? உட்காருங்கள். வினா எண்கள் 177 மற்றும் 178 இறுதியாக எடுத்துக்கொள்ளப்படும்.

விவசாயப் பயிர்களுக்கு மருந்து அடித்தல்.

179---(*வினா எண். 805)--- திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நோயினால் விவசாயப் பயிர்கள் பாதிக்கப்படும்போது அரசே மருந்து அடித்துவிட்டு அதற்கான செலவை நிலவரியுடன் (கிஸ்து) வசூல் செய்யும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?